IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.
DEPOSITION OF WITNESS

SC.NO.44/2025

Deposition of Witness for P.W.5

| | | |
|---|---|---|
| NAME | - | Harish |
| FATHER NAME | - | பாலுகோபால் |
| VILLAGE | - | திருவலம் |
| TALUK | - | |
| OCCUPATION | - | டிரைவர் |
| AGE | - | 30 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 21.01.2026.

4ம் எதிரி நீதிமன்ற காவல். மற்ற எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்.

<u>முதல் விசாரணை-</u>

நான் திருவலத்தில் குடியிருக்கிறேன். தனியாரில் கார் ஓட்டுநராக பணிபுரிகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. வழக்கு சம்மந்தமாக எனக்கு ஒன்றும் தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையது கிடையாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்க கோரியும் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதின் பேரில் அனுமதி அளிக்கப்பட்டது.)**

<u>குறுக்கு விசாரணை-</u>

25.05.2020ம் தேதி பகல் 13.00 மணிக்கு திருவலம் சித்தூர் ரோடு சேர்காடு திருவள்ளுவர் பல்கலைக்கழக பஸ் ஸ்டாப்பிடம் 6ம் எதிரி ராபின்சன்னை என் முன்னிலையிலும் அரவிந்தன் முன்னிலையிலும் கைது செய்து அவர்

தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்திற்கு சாட்சியாக கையொப்பம் செய்தேன் என்றும் 13.06.2020 பகல் 13.00 மணிக்கு திருவலம் காட்பாடி ரோடு சேவூர் FCI குடோன் கேட் எதிரில் 7ம் எதிரி நவீனை என் முன்னிலையில் அரவிந்தன் முன்னிலையிலும் கைது செய்து அவர் தானாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பம் செய்துவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று 21.01.2026 தேதியில் கையெழுத்திட்டார்.

P V SANDILYAN

Digitally signed by P V SANDILYAN
Date: 2026.01.21 19:41:54 +0600

Additional District Judge(FTC),
Vellore